# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 18.08.2018

## தமிழக நிகழ்வுகள்

- **கேரளா மற்றும் தமிழ்நாடு** இடையே **முல்லைப் பெரியாறு** மற்றும் **ஆழியாறு** உள்ளிட்ட அணைகளின், வெள்ள நீர் வெளியேற்றத்தை ஒருங்கிணைக்க மத்திய நீர்வள ஆணையத்தின் தலைவர் **'நரேந்திர குமார்'** தலைமையில் மத்திய ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.



## இந்திய நிகழ்வுகள்

- **72வது சுதந்திர** தினத்தை முன்னிட்டு தெலுங்கானா மாநிலம் மூன்று புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - **ரைத்து பீமா திட்டம்** (Rytu Bima) - விவசாயிகளுக்கு இலவச காப்பீடு திட்டம். இத்திட்டம் 2016ம் ஆண்டில் தொடங்கப்பட்ட பசல் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.
  - **கந்தி வெலுகு Kanti Velgu** என்ற கண் பராமரிப்பு திட்டம்(அனைத்து குடிமக்களுக்கும் இலவச கண் பரிசோதனை)
  - **பொருளாதார ஆதரவு திட்டம்** - பின் தங்கிய வகுப்பினர்களுக்கு பொருளாதார ஆதரவு வழங்கும் திட்டம்



- **இராஜஸ்தான்** மாநில அரசு செப்டம்பர் மாதத்தை ஊட்டச்சத்து மாதம் ஆக(**Month of Nutrition**) கடைபிடிக்க முடிவு செய்துள்ளது.
    - இந்த ஊட்டச்சத்து மாத திட்டத்தின் மூலம் 2018 செப்டம்பர் மாதம் முதல் இராஜஸ்தான் மாநிலம் அரசு பள்ளிகளில் 1 முதல் 8வரை பயிலும் மாணவர்களுக்கு தினமும் பால் வழங்க உள்ளது.




- பெண்களின் நலன்சார்ந்த திட்டத்தின் கீழ் பயனாளிகள் பயன் பெறும் வகையில், மேற்க வங்காள மாநில அரசு அறிமுகப்படுத்திய **"கன்னியாஸ்ரீ பிரகல்பா திட்டத்தில்" (Kanyashree Prakalpa Scheme)** பயன் பெறும் பயனாளிகளின் குடும்ப வருமான உச்ச வரம்பை நீக்கியுள்ளது. (West Bengal Government removed family income ceiling)
- **குறிப்பு** (கன்னிய ஸ்ரீ பிரகல்பா திட்டம்)
    - பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களில் உள்ள பெண்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக மேற்கு வங்காள (West Bengal) மாநில அரசு மார்ச் 8, 2013 ஆம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
    - இத்திட்டத்தின் மூலம், மாணவிகளுக்கு,
    - 8 ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை ஆண்டு தோறும்

ரூபாய் 750-ம்,

- அம் மாணவியின் மேற்படிப்புக்கு ரூபாய் 25,000-ம் வழங்கும்.




**உலக நிகழ்வுகள்**

- பூமியில் இருந்து பார்வைக்கு மறைவாக உள்ள நிலவின் மற்றொரு பக்கத்தை ஆய்வு செய்வதற்காக சீன நாடானது **Change – 4** என்ற திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு டிசம்பரில் செயற்கைகோளை அனுப்ப திட்டமிட்டுள்ளது.

  **குறிப்பு:**
  - சீன நாடானது இதற்கு முன் **Change – 3** என்ற திட்டத்தின் மூலம் நிலவின் புவியை நோக்கிய பகுதியை ஆய்வு செய்வதற்காக “Yutu” எனும் செயற்கைகோளை அனுப்பியது குறிப்பிடத்தக்கது.
- 2018 – ஆம் ஆண்டிற்கான **உலக தத்துவ காங்கிரஸ்** மாநாடு **(24th World Congress of Philosophy, WCP – 2018)**. சீன தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற்று வருகிறது (August 13 – August 20)
  - இம்மாநாட்டின் கருப்பொருள் **“மனிதனாக கற்றுக் கொள்ளுதல்” (Learning To Be Human)**.



We Shine Academy TM

## விளையாட்டு செய்திகள்

- **அபுதாமி மாஸ்டர்ஸ் - 2018 செஸ்** சாம்பியன் போட்டியின் மூலம், இந்தியாவின் **"53-வது செஸ் கிராண்ட் மாஸ்டராக"** கேரளாவைச் சேர்ந்த "நிகில் சரின்" **(Nihal Sarin)** என்பவர் தேர்வாகியுள்ளார்.



## அறிவியல் & தொழில் நுட்பம்

- **Dial 100 police – செயலி** – மத்திய பிரதேச மாநில அரசு அவசர நேரத்தில் உதவி தேவைப்படுபவர்களுக்கு **Dial 100 police** என்ற மொபைல் செயலி-யை அறிமுகப்படுத்தியுள்ளது.



- பூனாவைச் சேர்ந்த வானியலாளர்கள் இந்தியாவின் மிகப்பெரிய மீட்டர் அலை ரேடியோ தொலைநோக்கியான **GMRT –ஐ (Giant Metre Wave Radio Telescope)** பயன்படுத்தி சுமார் 12 பில்லியன் ஒளி ஆண்டு தூரத்தில் அமைந்துள்ள கதிர்வீச்சு (ரேடியோ) பால்வெளி மண்டலத்தை (Radio Galaxy) கண்டறிந்துள்ளனர்.

We Shine Academy™




**நியமனங்கள்**

- ஐ.நா பொதுச் சபையின் அடுத்த **73வது தலைவராக மரியா ஃபெர்னாண்டா எஸ்பினோசா கார்செஸ Maria Fernanda Espinosa** என்பவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
  - இவர் ஈக்டார் நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஆவார்
- **குறிப்பு**
  - ஐ.நா. பொதுச் சபையின் தலைவராக பதவியேற்கவிருக்கும் **4வது பெண் தலைவர்** மரியா ஃபெர்னாண்டா எஸ்பினோசா ஆவார்.
  - ஐ.நா சபையின் முதல் பெண் தலைவர் இந்தியாவைச் சேர்ந்த **விஜயலெட்சுமி பண்டிட்** ஆவார்.



We Shine Academy™